# தமிழ்ப்போல் வாழ்க!

குழிக்கரையில் குழந்தையாய்ப்
பார்த்த எங்கள் மருகன் அசோகன்;
படித்துப் பட்டம் பெற்று,
சுங்கத்துறையின் தங்கமகனாய்,
ஆண்டு 36 மாசற்ற பணியாற்றி,
நிறைவு பெறுவது எங்களுக்குப் பெருமை!

சுங்கத்துறை ஒரு தமிழ்ச்சங்கத்துறை
என்பதைத்,
தடாகத்தில் மணம் பரப்பும்,
கவிதை வாழ்த்து மலர்கள் பரைசாற்றும்!
ஒரு புலவர் கூட்டமே,
பணிநிறைவு வாழ்த்துப்பா
படிப்பதை யாரேனும் கண்டதுண்டா?
பாரேனும் பகர்ந்ததுண்டா?

பணி நிறைவுக்குப் பின்,
ஊரடங்கு காரணமாய், வீடடங்கி இருந்தாலும்;
நம் இலக்கிய தடாகத்தில்,
கவிதை மலர்கள்
பூத்துக்குலுங்கிடச் செய்யுங்கள்;
தம்பி கவிவளவனாரே!
தமிழ்போல் வாழ்க!



அன்புடன் மாமா,

-பேரளம் சொக்கப்பா